செய்து வந்திருக்கிறார்கள். அரசியலைப்பற்றிச் சொல்லும்போது, அன்றைய நிலைமைகள் நினைவுக்கு வருகின்றன. 30 ஆண்டு காலத்திற்கு முன்பு, எந்த நிலையில் இருந்து, இன்றைக்கு எவ்வளவு முன்னேற்றங்களைப் பெற்றிருக்கிறது தமிழ்நாடு என்று எண்ணும்போது, நாவலர் அவர்களுடைய பணி போற்றத் தக்கது. எவ்வளவோ தடவைகள் அவர்கள் சிறைச்சாலைக்குப் போயிருக்கிறார்கள். இந்த நாட்டில் வெயிலிலும், வாய்க்கால் ஓரத்திலும், தோப்பு துறவுப் பகுதிகளிலும், சண்டமாருதமென செயலாற்றிய சிற்பிகளாவார்கள் அவர்கள்.

ஒரு காலத்தில் இலக்கியம், கலை என்றாலே அவையெல்லாம் பல்கலைக் கழகத்தின் புத்தகப் பேழைகளில் இருக்கும் நிலைதான் இருந்தது. அந்த காலத்தில், தமிழ் என்றால், அல்லி அரசாணி கதை, நல்ல தங்காள், பெரிய எழுத்துக் கதைகள், என்ற அளவில் புழுதி படிந்த நிலைதான் இருந்தது. சாதாரண, சிறிய ஏழை எளிய மக்களும் நல்ல வகையில் அறிந்து கொள்ளும் வகையில், கலிங்கத்துப்பரணி, புறநானூறு, போன்ற இலக்கியங்களை வெளியுலகத்திற்குப் பரப்பிய சிற்பியாவார்கள் அவர்கள். இன்றைக்கு தமிழ் நாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதில் அவர்களுக்கு ஒரு பெரிய இடம், மகத்தான இடம் உண்டு என்பதில் எந்த விதமான சந்தேகமும் கிடையாது.

நிதானம் என்றால், மிக்க நிதானம் உள்ளவர்கள். மற்றவர்களுக்கு கோபம் வரும் அளவிற்கு, அவ்வளவு பெரிய நிதானத்தைக் கையாண்டு, கட்சிக்கு மட்டும் சொந்தக்காரர் என்பதில்லாமல், எத்தனையோ தலைசிறந்து வரும் தலைவர்களில் சிறந்தவர். அப்படிப்பட்ட நாவலர் அவர்களுக்கு மதுரைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்து மிகப் பெரிய பெருமையைச் செய்கிறது என்பது அவர்களுக்கு இன்னமும் உற்சாகம் கொடுத்திருக்கிறது. சமுதாய முன்னேற்றத்திற்கு, மேம்பாட்டிற்கு, பொது வுடைமைச் சமுதாயமாக வகுப்பதில் சிறந்த தொண்டாற்ற நல்ல இதயம் உள்ள பண்பாளரை மதுரைப் பல்கலைக்கழகம் சிறப்பித்திருப்பதை, உண்மையிலேயே இந்த மாமன்றத்தில் உள்ள எல்லாப் பகுதி உறுப்பினர்களும் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

மாண்புமிகு நாவலர் அவர்கள், இன்னும் பன்னெடுநாள், நீண்ட நெடுநாள் வாழ்ந்து, தமிழ்க் குலத்திற்கும், மனித சமுதாயத்திற்கும், ஒப்பற்ற சேவைகளைச் செய்து நீடுழி வாழ வேண்டும் என்று நம்முடைய இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைச் சொல்லுகிறோம் என்று கூறி, இதை ஆமோதிக்கும் வகையில் எல்லோரும் கரவொலியின் மூலம் இந்தக் கருத்துக்களை ஆதரிப்பீர்கள் என்று கூறி அமர்கிறேன். (பலத்த கரவொலி).

(4) அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு. 22—1—1971 அன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவின்படி பேரவையின் நிகழ்ச்சி ஏற்கனவே அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளபடி நடைபெறும்.